**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.132/2024
Prosecution witness.04

| | |
|---|---|
| பெயர் : முனியசாமி | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 14th day of February 2025.

14.02.2025

(எதிரிகள் 1 முதல் 4 ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். 25.02.2024 ம் தேதி மாலை சுமார் 06.30 மணியளவில் அரிராம் என்பவருக்கும் 1ம் எதிரி ராஜேந்திரன் தரப்பிற்கும் தேவர்குறிச்சியில் உள்ள முனியசாமி கோவில் அருகே சண்டை நடந்தது. அப்போது அங்கு அரிராமின் அண்ணன் அ.சா.1 கார்த்திக் அங்கு வந்தார். அப்போது 2ம் எதிரி அஜித்குமார் அ.சா.1 கார்த்திக்கை கத்திக்கம்பை வைத்து இடது பக்க தலையில் அடித்தார். 1ம் எதிரி ராஜேந்திரன், 3ம் எதிரி பூமுருகன் மற்றும் 4ம் எதிரி வில்வக்கனி ஆகியோர் அ.சா.1 கார்த்திக்கை தலையில் அடித்தார்கள்.

2) பின்னர் அ.சா.1 கார்த்திக்கை முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தற்போது குறுக்கு விசாரணை இல்லை என்றதன்பேரில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.